III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR

AT POONAMALLEE

O.S.45/2022

Deposition of witness for the Plaintiff/PW1
Respondent solemnly by Tmt. R. Santhi Translator
in accordance with the provision of Act I for 1873 on 19-01-2024

| | | | |
|---|---|---|---|
| Name | : ஸ்டாலின் | Caste | : |
| Father's Name | : ஏகாம்பரம் | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

**<u>குறுக்கு</u>** <u>விசாரணை</u>

பிரதிவாதி எனக்க பணத்தை திருப்பி தரச்சொல்லி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் இடத்தை நான் விற்று கொடுத்ததாலும் அந்த இடத்தை காலி செய்து கொடுத்ததினாலும் பிரதிவாதி எனக்கு பணம் தரவேண்டியதாக இருந்தது. மேற்கூறிய விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆம். வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அன்னை புரமோட்டர்ஸ் என்ற பெயரில் ரியல்எஸ்டேட் நடத்தி வருகிறேன். அதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது மதுரவாயல் வார்டு 144 ல் கவுன்சிலராக உள்ளேன். இவ்வழக்கு அலுவல்களின் போது நான் அந்த பதவியில் இல்லை. அதற்கு முன்னர் நான் கவுன்சலராக இருந்துள்ளேன். அசையா சொத்துக்கள் வாங்க விற்பதற்கான தரகர் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்து'ளேனா என்றால் இல்லை. நான் ரூ.4,50,00,000/-க்கு பிரதிவாதியின் சொத்தை விற்று கொடுத்தேன். அந்த இடத்தை வாங்கியவரை நான் காண்பித்து கொடுத்தேன். அந்த சொத்தை வாங்கியவரை எனக்கு மற்றவர் மூலமாக தெரியும். வாதி அவரின் நிலத்தை வாங்கிவரிடமிருந்து அவ்வாறு வாங்குவதற்கு முன்னர் முன் பணம் ஏதேனும் பெற்றாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது வழக்குரையில் விற்பனை தொகையை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மதுரவாயலில் நிலம் சம்மந்தமான பிரச்சனை ஏதேனும் ஏற்பட்டால் நான் சென்று பேசுவேன் என்றால் என்னை அழைக்கும் போது செல்வேன். பொதுவாக கமிஷன் தொகை விற்பனையில் 2 சதவீதம். பொதுவாக விற்பனை முடிந்த பின்னர் தான் கமிஷன் கொடுக்கப்படும் என்றால் சரிதான். வாதியிடமிருந்து இடத்தை வாங்கியவரை எனக்கு

**தெரியும். அவ்வாறு விற்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் 1.5 கிரவுண். வாதி எனக்கு கமிஷன் தரவேண்டும் என்று எழுத்துபூர்வமாக ஒப்பந்தம் போடப்பட்டதா என்றால் இல்லை வாய்மொழியாக சொல்லினார். பதிவு செய்யப்படும் தேதியன்று நான் பதிவு அலுவலகம் சென்றேனா என்றால் இல்லை. நிலத்தை வாங்கியவர் என்னை பதிவு அலுவலகம் வரச்சொல்லி அழைத்தாரா என்றால் இல்லை.**

(கற்றறிந்த **பிரதி**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).